DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.332/2019**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW3 | Caste | : | |
| Name | : | இஸ்மாயில் | Age | : | 52 |
| F/N | : | முஸ்தபா | Occupation | : | சமையல் மாஸ்டர் |
| Village | : | பெருங்குளம் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 16th day of October 2023.

**16.10.2023**

**(எதிரி ஆஜராகவில்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது)**

**முதல் விசாரணை**

நான் இராமநாதபுரம் பெருங்குளத்தில் குடியிருந்து கொண்டு சமையல் மாஸ்டராக தொழில் செய்து வருகிறேன். ஐந்து, ஆறு வருடங்களுக்கு முன்பு நான் உச்சிப்புளி காவல் நிலையத்திற்கு ஒரு வழக்கு சம்மந்தமாக சென்றேன். அப்போது போலீசார் என்னிடம் ஒரு வெள்ளை தாளில் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது. (**அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க கோரி அரசு தரப்பில் கேட்டுக் கொண்டதற்கிணங்க அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது).**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 09.02.2018ம் தேதி காலை 10.30 மணிக்கு போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நானும், பூமி என்பவரும் கையெழுத்து செய்தோம் என்றும் போலீஸ் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை**

**மறு விசாரணை :** இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**